1975 அக்டோபர் 23]

*11 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடியிலிருந்து பூம்புகார் வரை கடல் அரிப்புக்காக தடுப்புச் சுவர் எடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தற்பொழுது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

இதைத் தொடர்ந்து ஒன்றை நான் தெரிவித்து விடுகிறேன். பூம்புகார் பற்றிய இந்தக் கேள்வி போடப்பட்ட நேரத்தில் இந்த விடை அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சமீபத்தில் முதலமைச்சரவர்கள்கூட பூம்புகாருக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். நானும் சென்றிருந்தேன். கடலரிப்பு அதிகமாக இருக்கிறது என்று அறிந்த முதலமைச்சரவர்கள் அரசு அதிகாரிகளைக் கூப்பிட்டு அதை எந்த அளவிற்குப் போக்க முடியுமோ அந்த அளவிற்கு தடுப்புச் சுவருக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இந்தக் கடல் அரிப்பினால் ஏழை மீனவர்களுக்கு இல்லங்கள் இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அங்கே தடுப்புச் சுவர் கட்ட வேண்டியது மிகவும் அவசியம். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, பூம்புகாரைப் பொறுத்தவரையிலும் ஏழை மீனவர்கள் குடிசைகளில் வாழவில்லை. அங்கேயுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாகப்பட்டினத்தில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது, நான் ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தில். அங்கத்தினருக்கு இதுபற்றி வேறு ஏதேனும் குறைபாடு இருந்தால் அதுபற்றி எழுதி அனுப்பினால் விசாரிக்கச் சொல்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, பூம்புகார் போன்ற இடங்களிலே மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தோம். கொடியம்பாளையத்திலேயிருந்து கோடிக்கரை வரையிலேயும் தடுப்புச் சுவர் கட்டவில்லை என்றால் எத்தனை கோடி ரூபாய் செலவழித்து வீடுகள் கட்டினாலும் அவை வீணாகிவிடும். குறிப்பாக, திருமுல்லைவாசல் பகுதியிலே ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. பெரும்பான்மையான முஸ்லீம் சமுதாயத்தினர் இதே குறையைச் சொல்லி வருகிறார்கள். இதைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, என்னிடத்திலே இருக்கிற தகவல்படி கடலரிப்பு அதிகமாக இருப்பதாகத் தகவல் இல்லை. அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி கடல் அலைகள் அதிகமாக இருந்தால் தண்ணீர் உள்ளே வருவதும் வெளியே செல்வதுமாக இருக்கிறது. காற்று, புயல் அடிக்கும்பொழுது கொஞ்சம் அதிகமாக வருகிறது. இப்படி கடல் தண்ணீர் வருகிறதே தவிர வேறொன்றும் இல்லை. கடல் அரிப்பு கன்னியாகுமரி மாவட்டத்திலே சில பகுதிகளிலே இருக்கிறது. அவைகளுக்குத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு 351 இலட்சம் ரூபாய்க்கான திட்டத்தை மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி நிதி கேட்டோம். இதுவரையில் அதற்கே பதில் இல்லை. மேற்கொண்டு கேட்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பண்டைய காவிரிப் பூம்பட்டினம் கடலில் மூழ்கிவிட்டது என்று சங்க இலக்கியத்தில் குறிப்பிடுவார்கள். ஆனால் இப்பொழுது கழக அரசு, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் புதிய பூம்புகாரை சிறப்பாக உருவாக்கியிருக்கிறார்கள். இருந்தாலும், இப்பொழுது ஏற்கனவே இருந்த கணணகி சிலை வரையில் கடலரிப்பு மிகத் துரிதமாக, நான்கைந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக மிகவும் வேகமாக அங்கே கடலரித்து கண்ணகி சிலையையே கடல் கொள்ளக் கூடிய அளவிற்கு உண்மையிலேயே நிலைமை இருக்கிறது. இந்த நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல தடவைகள் நேரிலேயே கண்டு வருகிறார்கள். எனவே, பொதுப்பணித் துறையின் மூலம்

1975 அக்டோபர் 23]

விரைந்து ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி கண்ணகி சிலையையும், இந்த புதிய பூம்புகாரையும் காப்பாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ள புதிய பூம்புகார் கலைக்கூடம் போன்றவைகளையும், நெடுங்கல் மன்றம், இலஞ்சி மன்றம் போன்றவைகளையும் காப்பாற்றுவதற்கும் கடல் அரிப்பிலிருந்து கண்ணகி சிலையைக் காப்பாற்றுவதற்கும் அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் ஒரு தடுப்புச் சுவர் அமைப்பதற்கே கூட 10 இலட்சம், 15 இலட்சம் ஆகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

அந்தக் கலைக்கூடங்களைப் பற்றி மட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர்கள் கடலரிப்பிலிருந்து மீனவர்களுடைய குடிசைகளைக் காப்பாற்றவும் அந்தத் தடுப்புச் சுவர் அமைய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மீனவர்களுடைய குடிசைகளை நல்ல கெட்டியான வீடுகளாக மாற்றியமைக்க அரசு திட்டம் தயாரித்து, முதல் கட்டமாக ஐயாயிரம் வீடுகள் என்று தொடங்கி யிருக்கிறோம். அப்படி அந்த வீடுகள் கட்டப்படும் நேரத்தில் மிக நெருங்கிய அளவில் கடலோரத்தில் கட்டப்படாமல் கொஞ்சம் தொலைவிலே கட்டுவதற்கு ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும், மீனவ நண்பர்களும் ஒத்துழைத்தால் இப்பொழுது நாம் அந்த கடலரிப்பிலிருந்து ஓரளவிற்குக் காப்பாற்ற முடியும். இல்லாவிட்டால் அந்த வீடுகள் கட்டுவதற்காகும் செலவைவிட அதிகச் செலவு கடலரிப்பைத் தடுப்பதற்கு ஆகும். பொருளாதார ரீதியில் இதை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டும். இவையனைத்தும் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்தக் கடலரிப்பால் சென்னை மாநகரத்திலே இராயபுரம் கடலோரப் பகுதியிலும், குறிப்பாக திருவொற்றியூர் நகரத்திலே கடற்கரை அருகில் அடிக்கடி பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அரசு ஏதாவது ஆராய்ந்து தனித் திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனியாகக் கேள்வி போட்டால் பதில் சேகரித்து அளிக்கிறேன்.